# ஸ்ரீரங்கம் பா.ஜ.க வேட்பாளர் மீது தாக்குதல் - பொன் இராதாகிருஷ்ணன் கண்டனம்

நடைபெற உள்ள ஸ்ரீரங்கம் இடைத்தேர்தலில் எப்படியாவது வெற்றிப்பெற வேண்டும் என்கின்ற சிந்தனையோடு அ.தி.மு.க-வை சேர்ந்தவர்கள் தேர்தல் விதிமுறைகளை மீறி பல தவறான வழிகளை கையாண்டு வருகிறார்கள்.

வீதிதோறும் சமையல் செய்து சாப்பாடு போடுவது, ஓட்டுக்காக பணம் கொடுப்பது, இலவசங்கள் கொடுப்பது போன்றவை வெளிப்படையாக நடந்து வருகின்றன. அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மற்றும் நகராட்சி தலைவர்கள் முதற்கொண்டு பல்லாயிரக்கணக்கான வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் அங்கு குவிக்கப்பட்டு வாக்காளர்கள் அச்சுறுத்தப்படுவதும், ஆசை வார்த்தைகள் கூறப்படுவதும் அனைவரும் நன்கு அறிவார்கள்.

ஆளும் கட்சியின் இதே செயலை, ஆண்ட கட்சி தி.மு.க-வும் செய்து வருவது ஸ்ரீரங்கம் தொகுதி பகுதிகளில் சர்வ சாதாரணமாக காணப்படுகிறது. இதை தடுக்க தேர்தல் ஆணையர் போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம்.

சட்டமன்ற தொகுதி பகுதியில் எந்த ஒரு இடத்திலும் வாகன சோதனை நடத்தப்படாமல் பண புழக்கம் சர்வ சாதாரணமாக நடப்பது தேர்தல் நேரத்தில் எல்லாவித தவறுகளும் நடப்பதற்கு வாய்ப்பு அளித்துள்ளது.

இன்று(08.02.2015) காலை ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதியில் ஸ்ரீரங்கம் நகரை சார்ந்த வீரேஸ்வரம் பகுதியில் தேர்தல் பிரச்சாரத்திற்காக சென்ற பா.ஜ.க-வின் வேட்பாளர் திரு.சுப்பிரமணியம் அவர்களையும், திருச்சி நகர் மாவட்டத்தின் தலைவர் திரு.பார்த்திபன், துணை தலைவர் திரு.கோவிந்தன், ஸ்ரீரங்கம் மண்டல தலைவர் திரு.சர்வேஸ்வரன் போன்றோரை தேர்தல் பிரச்சாரம் செய்ய விடாமல் தடுத்து அ.தி.மு.க-வினர் தாக்கி இருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

தேர்தலை சுமூகமாக இவர்கள் நடத்த விடமாட்டார்கள் என்பதற்கு அ.தி.மு.க-வின் நடவடிக்கை கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

பா.ஜ.க வேட்பாளர்களையும், மற்றவர்களையும் தாக்கிய அ.தி.மு.க-வை சேர்ந்தோரை காவல்துறை உடனடியாக கைது செய்து அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், இடைத்தேர்தல் சுமூகமாக நடைபெறும் வகையில் ஸ்ரீரங்கம் சட்டமன்ற பகுதியில் முகாமிட்டிருக்கும் தொகுதியை சேராத அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் முதற்கொண்ட அனைத்து நபர்களையும் அப்புறப்படுத்த கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பாதுகாப்பான, நேர்மையான தேர்தல் நடப்பதை உறுதி செய்யும் வகையில் தேர்தல் விதிமுறைகளை கடுமையாக கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**-பொன்.இராதாகிருஷ்ணன்**